# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

## OS.No. 100/2018

| | | |
|---|---|---|
| **Deposition of Witness** | : | **PW -1** |
| **Name** | : | குணசேகரன் |
| **Father's Name /W/o** | : | கோவிந்தராஜ் |
| **Religion** | : | இந்து |
| **Caste** | : | - |
| **Calling** | : | கூலி வேலை |
| **Address** | : | சிறுநமல்லி கிராமம் அரக்கோணம் வட்டம். |

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 18.04.2023.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என்ன பரிகாரம் வேண்டும் என்று தாவா போட்டுள்ளேன் என்றால் என் இடம் வேண்டும் என்று போட்டுள்ளேன். என் உடன் பிறந்தவர்கள் 5 பேர். என் தந்தை எனக்கு மட்டும் தான் செட்டில்மெண்ட் எழுதினாரா என்றால் 5 பேருக்கும் எழுதினார். நஞ்சை சர்வே நெ.30, புதிய சர்வெ எண்.30/2ற்கு 10 செண்ட் என் தங்கை பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் ஆம். எனக்கு சர்வே நெ.30, புதிய சர்வெ எண்.30/2ல் எவ்வளவு விஸ்திரணம் இடம் எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் 16 3/4 செண்ட் எழுதிக் கொடுத்தார்.

2. 16 3/4 செண்டில் விற்பனை ஆவண எண்.3842/2010 மூலம் 11 1/2 செண்டை பிரதிவாதி என் சகோதரிக்கு விற்பனை செய்தேன் என்றால் நான் விக்கவில்லை. அவர் அவ்வாறு எழுதிக்கொண்டார். வா.சா.ஆ.4 தான் அந்த விற்பனை ஆவணம் என்றாலும் அதில் உள்ள புகைப்படம் என்னுடையதா என்றால் ஆம். வா.சா.ஆ.4ல்

உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் ஆம். விற்பனை ஆவண எண்.6952/2010 மூலம் 2 1/2 செண்டை பிரதிவாதி என் சகோதரிக்கு விற்பனை செய்தேன் என்றால் நான் விக்கவில்லை. ச்ர்வே எண்கள் விட்டு போய் விட்டதாக சொல்லி அவர் அவ்வாறு எழுதிக்கொண்டார். அதில் தான் வீடு உள்ளது.

(வழக்கறிஞர் வேண்டுகோளிற்கினங்க கு.வி.தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது).